# வெள்ளையில் ஒரு புள்ளி

சிறு கவிதைகள்

தாஸிம் அஹமது

கமல் பிரதர்ஸ் பப்ளிகேஷன்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பரும் ஆசானுமான
எனது பிரியமுக்குரிய நான்
திருமதி அன்புடன் அன்பளிப்பு

23/05/82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளையில் ஒரு புள்ளி

சிறு கவிதைகள்

தாஸிம் அஹமது

கமல் பிரதர்ஸ் பப்ளிகேஷன்
75/45, அப்துல் ஹமீது வீதி, கொழும்பு - 12.

(உரிமைப் பதிப்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VELLAYIL ORU PULLI
(TAMIL SHORT - POEMS)

Author:
**Dr. THASSIM AHAMED**

Publisher:
**KAVIN KAMAL**

FIRST EDITION: MAY - 1982

**Publication No: 4**

**Copy Right Reserved**

KAMAL BROTHERS
**Publication**
**75/45, Abdul Hamid Street,**
**Colombo - 12.**

**Price 6.00**

**Special Edition Rs. 10.00**

நூல் வெளியீட்டு விழா ஏற்பாடு:

**வலம்புரி கவிதா வட்டம்**
38, சேர்ச் வீதி, கொழும்பு - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலம்புரி கவிதா வட்டத்திற்கு
நல்லாதரவு தரும்
கவிதா நெஞ்சங்களுக்கு
இந்நூல்

## சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழ் கவிதையின் நவீனப் போக்குகளை இத் தொகுதியில் உள்ள சில கவிதைகள் இனங் காட்டுகின் றன. ஒரு முதிர்ந்த கவிஞனின் ஆரம்ப கால முன்னு ரையாக இத்தொகுதி விளங்குகிறது.

ஆங்கிலக் கவிதை உலகில் பிரசித்தி பெற்ற **Limerick** என்ற குறும் பாடற் பண்பு சில கவிதைகளில் கண்சிமிட்டுகின்றன.

குறிப்பாக, அங்கதச் சுவையை கவித்துவத்தோடு வெளியிடும் லாவகம், உதட்டுக்குள் சிரித்து உணர்வுகளை நீவிவிடும் இங்கிதம் இந்த "வெள்ளையில் ஒரு புள்ளி"யின் கவித்துவ விலாசமாகும்.

தற்கால தமிழ்க் கவிதையின் நம்பிக்கை ஒளியில் ஒருவராக கவிஞர் தாஸிம் அஹமது விளங்குகின்றார்.

இவர் எதிர்காலத்தில் சமுதாயப் பிரக்ஞையுள்ள கலாபூர்வமான படைப்புகளை அளிக்கும் நாளை எதிர்பார்க்கின்றேன்.

பிரியமுடன்,

**ஈழவாணன்**

33, லோரிஸ் வீதி,
கொழும்பு - 4.
08 - 05 - 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இலகுவான, செம்மையான சொற்களை அழகாகப் பிரயோகித்து யாத்த சில குறுங்கவிதைகளை இந்தத் தொகுப்பில் தந்துள்ளோம். இவற்றில் சில மரபு கலைக்கப்பட்டவைபோன்று தோன்றினாலும் தளை, ஓசைநயம் குன்றாமலும் மேலோட்டமாக சாதாரண கருத்துக்களை கூறுவதாயும், ஆராய்ந்து பார்க்கையில் ஆழமான உள்ளார்த்தங்களை அடக்கியதாயும் யாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

டாக்டர். தாஸிம் அஹமது அவர்கள் 1974ம் ஆண்டுகளில் யாத்த கவிதைகளே இவையென்றாலும், உயிருள்ள - உளச்சார்புள்ள கருத்துக்கள் வெளியாவதை உணர்ந்து, தொகுத்து, இலங்கையில் அச்சுக்கலையில் ஒரு திருப்பமாக ஒருபக்கக் கவிதைகளாக, இலக்கிய நெஞ்சங்களுக்குத் தந்துள்ளதில் அகமகிழ்கிறோம்.

கமல் பிரதர்ஸ் பப்ளிகேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில குறிப்புகள்

இத்தொகுப்பில் காணப்படும் கவிதைகளை வெளியிடும் நோக்கம் எனக்கிருக்கவில்லை. நண்பர் கவின் கமலின் தூண்டுதலால் இவற்றை வெளியிட சம்மதித்தேன்.

இந்தக் கவிதைகளை மாத்திரம் கருத்திற்கொண்டு என்னுடைய கவிதை ஆளுமையை வாசகர்கள் கணித்து விடக் கூடாது. மேலும் நூலுருப் பெற வேண்டிய கவிதைகள் நிறைய இருக்கின்றன. அவற்றை வாசித்த பின்னரே என் கவிதை ஆளுமையை இனங் கண்டு கொள்ள முடியும்.

பிரசுர வசதி கருதி ய முதலில் இதனை வெளியிட அனுமதித்தேன் இக்கவிதைகள் 1974ம் ஆண்டுகளில் எழுதப் பட்டவை. சிறு சிறு துணுக்குகளாக தனித்தனிக் கருப் பொருள்களை உள்ளடக்கமாகக் கொண்டு, பல்சுவைக் கவிதைகளாக இக்கவிதைகள் அமைந்துள்ளன.

இந்நூலின் முதற் பதிப்பு விற்பனை உரிமையை வலம்புரி கவிதா வட்டத்தின் வளர்ச்சிக்காக விட்டுவிடுகிறேன்.

★ வலம்புரி கவிதா வட்டத்தின் பணிகள் பற்றி இறுக்கமான குறிப்புகள் எழுதிய ஜனுப். எஸ். ஐ. நாகூர் கனி,

★ நல்லதோர் அணிந்துரை அளித்த திரு. ஈழவாணன்,

★ அறிமுகக் குறிப்பு வழங்கிய ஜனுப் எம். ஏ. நுஃமான்,

★ இந்நூலை வெளியிட முன் சிறந்த ஆலோசனைகள் தந்துதவிய கலைவாதி கலீல்,

★ 'கமல் பிரதர்ஸ் பப்ளிகேஷன்' உரிமையாளர்களான கவின்கமல், கலைக்கமல் சகோதரர்கள் ஆகியோருக்கும்

★ வெளியீட்டு விழா ஏற்பாடு செய்த வலம்புரி கவிதா வட்டத்துக்கும் நான் கடமைப் பட்டுள்ளேன்.

தாஸிம் அஹமது

9, சாகிபு வீதி,
கல்முனை - 4.
10 - 4 - 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகவம் என்றால் கவிதை

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில், வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) என்பது, வண்டமிழ்கவிதையின் வளமார்ந்த வளர்ச்சிக்காக, நலமார்ந்த நற்றமிழ் கவிஞர்களின் எழுச்சிக்காக சாத்தப்பட்ட ஏணியாகும். வகவம் என்றால் கவிதைமீது தெளிக்கப்பட்ட பன்னீர்; சொரியப்பட்ட பூக்கள்; சூடப்பட்ட பூச்சரம். கவிதை சிரித்தால் வகவம் சிரிக்கும். கவிதையின் சிரிப்புக்காக வகவம் மேற்கொள்ளும்பணிகள் மணியானவை; மேற்கொள்ளவிருக்கும் பணிகளோ அணியணியானவை.

அவற்றுள் ஒன்று, ஈழத்துத் தமிழ் கவியுலகிற்கு கவிநூல்களை காணிக்கை செய்வது. இந்நன்னோக்கின் அடிப்படையில் கடந்த 14 - 2 - 1982ல் கவின்கமல் தீட்டிய 'மழையில்லா மேகம்' வகவத்தினால் கவி மகளின் பூப்பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. இப்போது தாஸிம் அஹமது எழுதிய 'வெள்ளையில் ஒரு புள்ளி' அர்ப்பணஞ் செய்யப்படுகிறது. வகவத்தின் மிகக் குறுகிய கால ஓட்டத்தில் கவிநூல் வெளியீட்டுப் பாதையில் வகவம் தாண்டும் இரண்டாவது மைல் கல் இதுவாகும்.

இத்தகு பல்வேறு மைல் கற்களை வருங்காலத்தில் வகவம் தாண்டி, நறுமணங் கமழும் நற்காலத்தை பொற்புறு கவிதைக்குப் பொற்காலமாய் பெற்றுத் தரும் தொடுவானம் இதோ நம் கண்முன் தோன்றுகிறது.

எஸ். ஐ. நாகூர் கனி
(வகவம்)

38, சேர்ச் வீதி
கொழும்பு 2.
31 - 3 - 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெள்ளையில் ஒரு புள்ளி .... 1
- தியாகம் .... 2
- சவர்க்காரம் .... 3
- கண்ணாடி .... 4
- நிறைகுடம் .... 5
- புத்தகப் பூச்சி .... 6
- உணர்ச்சி .... 7
- சிலை .... 8
- பற்பேதம் .... 9
- நுளம்பு .... 10
- இருள் .... 11
- முந்திரிக் கொட்டைகளே! .... 12
- முத்திரை .... 13
- சாத்திரம்? .... 14
- முதல் மாணாக்கர் .... 15
- வெளவால்களே! .... 16
- மரபுக் கவிதை / புதுக் கவிதை 17
- சோதனை 18 - 19
- பனி .... 20
- விழிப்புணர்ச்சி 21 - 22
- நப்பாசை 23 - 24
- தீண்டா நெருப்பு 25 - 26
- முனிவன் .... 27
- மாலை .... 28
- சுயநலம் 29 - 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளையில் ஒரு புள்ளி

புடைவைக் கடைக்குப்
புதிதொன்றை வாங்குதற்கு
நடந்தேன் அங்கே
நல்ல கவர்ச்சியுடன்
கிடந்த வெள்ளைப் புடைவையினைக்
கிழித்தேதான் வாங்கிவந்தேன்

வீட்டுக்கு வந்ததும்
விரித்தேன் புடைவையினை
சோட்டையுடன் வாங்கிவந்த
சுத்த வெள்ளைப் புடைவையிலே
கறுத்தப் புள்ளியொன்றும்
இருத்தலைக் கண்ணுற்றேன்!

சோட்டை — ஆசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ 2 □

## தியாகம்

செந் நெல்லின் எடைக்குச்
சொன்னங் கொடுத்தே
தன்பசியைப் போக்கியவர்
சரித்திரம் கண்டுள்ளோம்

பாண் 'கியூ'வில் நின்றும்
பகல் முழுதும் உழைத்தும்
பேணித்தன் குடும்பத்தின்
பிணிப்பசியைப் போக்கிடவே
உயிரையே நீத்த பெரும்
தியாகத்தைக் காணவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## சவர்க்காரம்

ஆடையிற் காணுகின்ற
அழுக்குகள் நீக்கிவிடும்
ஈடில்லா நம் மேனிக்
(கி)தந்தரு மணமூட்டும்
தாடியை வழித்திடவும்
தாராள உதவி செய்யும்
நாடோறும் அது தன்னை
நலித்தே பிறர்க்குதவும்

தன்னைத் தேய்ப்பதிலே
தன்னலமே இல்லாமல்
மண்ணில் உள்ளோர்க்கு
மாபெரிய சேவை செய்யும்
அந்தச் சவர்க்காரம்
அதி சிறந்த தியாகியன்றோ
சந்தனம் அதற்கீடோ?
சவர்க்காரம் போல்வாழ்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4

### கண்ணாடி

கண்ணின் அழகி பார்த்தாலும்
கண்ணாடி கண்ணாடிதான்
கண்ணில்லாக் குருடன்
தன்னை மறந்து பார்த்தாலும்
கண்ணாடி கண்ணாடிதான்
ஒன்றும் அறியா ஒரு குழந்தை
சென்று பார்த்தாலும்
கண்ணாடி கண்ணாடிதான்!

கண்ணாடி கண்ணாடிதான்
களங்கமில்லா அந்தக்
கண்ணாடியில் தோன்றுகின்ற
கணக்கில்லா உருவங்கள்
முன்னாடி வெவ்வேறாய்
முரணாய்த் தோன்றிடினும்
கண்ணாடி கண்ணாடிதான்
கண்கூடு இதுவாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைகுடம்

கிணற்றடியில் ஒருபக்கம்
கிடந்த குடமொன்றை
கணக்காக நீரூற்றி
நிறப்பித்தான் கிடக்கிறதோ
எனச் சென்று அதனருகே
எட்டித்தான் பார்த்தேன்

வெற்றுக் குடமாய்
வீற்றிருந்த அது கண்டு
உற்றேன் ஏமாற்றம்
உண்மை ஒன்றறிந்தேன்
'வெற்றுக் குடத்தினுள்ளும்
விளையாடும் மென் காற்று'
கற்றேன் அதன்மூலம்
கருத்துள்ள தத்துவத்தை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகப் பூச்சி

பரீட்சை நெருங்கிடவே
பல மாதம் முன்னர் நான்
இருட்டில் போட்டிருந்த
ஏடொன்றைப் புரட்டினேன்

'ஐயனர்' என்றே பலமுறை
அடுத்தடுத்து வாசித்தும்
ஐயம் போகவில்லை, மீண்டும்
ஐயுற்றேன் ஆசிரியர்
பொய்யை எழுதாரே எனப்
புலம்பி மூச்சு விட்டேன்

விட்ட மூச்சுடைய
வேகத்தால் புத்தகத்தில்
ஒட்டியிருந்த பூச் சொன்று
ஒதுங்கிப் பறந்திடவே
'ஐயனர்' என் நன்கு
அழுத்தமாய் வாசித்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகப் பூச்சி

பரீட்சை நெருங்கிடவே
பல மாதம் முன்னர் நான்
இருட்டில் போட்டிருந்த
ஏடொன்றைப் புரட்டினேன்

'ஐய்ஞர்' என்றே பலமுறை
அடுத்தடுத்து வாசித்தும்
ஐயம் போகவில்லை, மீண்டும்
ஐயுற்றேன் ஆசிரியர்
பொய்யை எழுதாரே எனப்
புலம்பி மூச்சு விட்டேன்

விட்ட மூச்சுடைய
வேகத்தால் புத்தகத்தில்
ஒட்டியிருந்த பூச் சொன்று
ஒதுங்கிப் பறந்திடவே
'ஐயஞர்' என நன்கு
அழுத்தமாய் வாசித்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்ச்சி

உடம்பினிலே ஓடுகின்ற
உணர்ச்சிகள் அனைத்தையுமே
இடுகின்றேன் ஒரு பெரிய
எண்சாண் போத்தலுக்குள்........

உணர்ச்சிகள் அத்தனையும்
உள்ளே அடைத்துப் பின்
இனிய நினைவுடனே
இறுக்கி மூடுகிறேன்!

ஓடின் நாளெல்லாம்........
ஒருநாள் நான் முன்னர்
மூடிவைத்த போத்தலை
முயன்று திறக்கின்றேன்!
'சோடா'ப் போத்தல் போல்
'சூ....' என்று சீறியது
'சோடா'தானே உடம்பினிலே
ஓடுகின்ற உணர்ச்சியெல்லாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலை

உள்ளே உடைசலுடன்
உணர்ச்சிகள் காட்டி நின்ற
கல்லால் செய்த சிலை
கருத்தைக் கவர்ந்ததுவாம்!
நல்ல சிலையென்றொருவர்
நாடி நெருங்குகையில்
உள்ளே இருந்த வொரு
பாம்பவரைத் தீண்டியதாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்பேதம்

ஒருபல்லும் இல்லாத
ஒரு மனிதக் குஞ்சு
சிரித்தாலும் அழகு தரும் -
தேனுகை இனித்திடுமாம்!
உரையாடத் தெரியாத
உள்ளத்தால் சிறிதான -
ஒரு மனிதக் குஞ்சதற்கோ
'சிறு குழந்தை' எனப் பெயராம்!

ஒரு பல்லும் இல்லாத
ஒரு பெரிய மனிதன்
சிரித்தாலும் அழகில்லை -
சீ! என்று வெறுத்திடுமாம்!
உரையாடத் தெரிகின்ற
உள்ளத்தால் பெரிய வந்த -
ஒரு பெரிய மனிதனுக்கோ
'பெருங் கிழவன்' என்ப் பெயராம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுளம்பு

ஏழையின் இரத்தத்தை
இரவிரவாய் உறிஞ்சிப்
பணக்காரன் உடம்பினிலே
பாய்ச்சுவதால் எமக்குள்ளே -
ஏழை பணக்காரன்
என்கின்ற நிலை மாற்றும்
பணியினைச் செய்கின்ற
துணிவான ஒரு தோழன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இருள்

மாலையில் வளர்கின்ற
மாய இருள் போக்கும்
நீள விளக்குகள்
நிரை நிரையாயிருந்து
சாலைகள் எங்கணும்
தருகின்ற பட்டொளியால்
சாலையின் இருளல்லோ
தானாய் மறைகிறது!

சாலை விளக்குகளின்
கீழே நடமாடும்
மனிதரின் உள்ளங்கள்
மறைந்து இருப்பதனாலோ
சாலை விளக் கெல்லாம்
தவறாது ஒளி தந்தும்
உலகம் பெருமிருளில்
ஓலமிடுகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முந்திரிக் கொட்டைகளே!

முந்திரிக் கொட்டைகளே!
நீங்கள் ஏன் பழத்தின் முன்னால்
வந்திருக் கின்றீர்கள்?
மறதி மிகுதியால் உங்களை
அந்த சுலைமான் நபி, உள்ளே
அமைக்கத் தவறிவிட்டார்
என்கின்ற பழங்கதையினை
ஏட்டினிலே படித்துள்ளேன்!

எந்த விதைகளிலும்
இல்லாத சுவையின்பம்
உங்களிடம் உண்டு
என்பதைக் காட்டுதற்கோ
முன்னால் இருக்கின்றீர்கள்?
முந்திக் கொண்டீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திரை

நண்பனொருவனின்
நலம் காணச் சென்றேன்....
எங்கோ போனதாய்
இருந்தவர் சொன்னர்!
எங்கே போயிருப்பான்?
என்னும் நினைப்பில்....
தபாற் கந்தோரை நோக்கிச்
சடுதியாய்த் திரும்பினேன்!
முத்திரையை வாங்கி
முன்வந்தான் நண்பன்!

வாங்கிய முத்திரையை
வாயினுல் நனைத்து
ஓங்கிய குத்துடன்
ஒட்டினுன் உறையில்
"ஏன்தான் இப்படி
இரக்கமின்றிக் குத்துகிருய்?"
"பசையில்லாத ஆட்சி(யில்)
பறக்குதப்பா முத்திரை!"
என்ருன் நண்பன்....
எதற்கோ நான் சிரித்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாத்திரம்?

காகம் கரைகிறது....
கறிச் சட்டி தீய்கிறது....
ஊரிலிருந்து நம்
உறவினர் வருவாரோ
என்ச் சென்று வாசலில்
எட்டிப் பார்க்கையிலே
நீட்டிய கையேந்தி....
நின்றுன் பிச்சைக்காரன்!

பாட்டி சொன்ன அந்தப்
பழைய சாத்திரம்
பிழையாகிவிட்டதைப்
பின்னர் நானுணர்ந்தேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் மாணுக்கர்?

அந்த ஆசிரியர்
அலட்டிக் கொண்டார்....
"இந்தா பயல்களே!
இப்படிக் கத்திஞல்........
சத்தம் போடுவோர்
புத்தகம் போகும்........
மௌன மாயிருங்கள்!"
என்றதும் ஒருவன்........

"வாத்தியாரய்யா எங்களின்
வாய்ப் பாடந் தன்னை
எங்ஙனம் எடுப்பார், தைரியம்
இருந்தால் பார்ப்போம்!"
என்றதும் சிரிப்பால் அந்த
இடமே அதிர்ந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வௌவால்களே!

வௌவால்களே! வௌவால்களே!
வாயினூற் கழிக்கின்ற வௌவால்களே!
ஒவ்வாத உடலுறுப்புக்களை
உள்ளடக்கியவௌவால்களே!

சுலைமான் நபி யவர்களின்
சுயமான ஆசையினுல் இந்த
நிலையினை அடைந்தீர்களோ?
நிம்மதி இழந்தீர்களோ?

இறைவன்றன் படைப்பின்
இணையில்லா மகத்துவத்தை
அரிதாக விளக்கி நிற்கும்
ஆதாரம் நீங்களன்றோ!

மனிதனின் பலவீனங்களுள்
மறதியும் ஒன்றெனவே
உணர்த்துவதற்காகவோ
உயிர் பெற்று வந்தீர்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுக் கவிதை

ஏர் கொண்டு மண்ணுழக்கி
ஏற்ற பயிர்கள்
வேர் கொள்ள விதை
விதைப்பதே போல் —
பார் போற்றும்
மரபுக் கவிதை
மொழி மண்ணை வளமாக்கும்!
உரமுண்டோ
அதற்கு நிகர் உரை!

## புதுக் கவிதை

மொழி மண்ணை
புதிதாகப் பண்படுத்திப்
பயிர் வளர்த்து
அறுவடை செய்ய வந்துள்ள
நவீன சாதனங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதனை

மழை பொழிந்ததும்
மண்மீது பல
நீர் நிலைகள்
நிரம்பி வழிந்தன!

தொடர் மழையும்
தொடுத்ததால்
மடைதிறந்து வெள்ளம்
வழிந்தோடியது!

அந்த வெள்ளம்
நொந்த மனிதர்களின்
குடிசைகளனைத்தும்
கொண்டு சென்றது!

அடுக்கு மாளிகைச்
சொந்தக் காரர்
அனைவரும் ஆபத்தின்றி
ஒடுங்கிய உடலுடன்
ஒதுங்கித் தப்பினர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் மழை நின்றது....
கொடு வெய்யில் வந்தது!
கோடை எறித்தது!

அடுக்கு மாளிகைச்
சொந்தக்காரர் அனைவரும்
வெளியே செல்ல
வேண்டியிருந்தது!

வெய்யில் அவர்களை -
வேகவைத்துச் -
சுட்டு எரித்துச் -
சோதனை செய்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனி

இரவு விடிகிறது!
இவ்வேளை - வெண்
சிறகுபோல் மேகங்கள்
சேர்ந்தெங்கோ போகிறது!

காலை மலர்கிறது!
கதிரோன் ஒளிர்கிறது!
வாழை இலைகளிலே....
வடிந்த பனித்துளிகள்
மேலே பறப்பதுதான்
வியப்பாய் இருக்கிறது!

அந்த வியப்புள்ள
அழகிய காட்சியினால்
சிந்தை இனிக்கிறது -
சிரிப்பும் வருகிறது!
அந்தக் காட்சியினால்
அடிமனதின் உள்ளே ஓர்
விந்தை பிறக்கிறது!
வியப்பாய் இருக்கிறது!

இலைகளில் வடிந்தே
இருந்த பனித்துளிகள்
நிலையில்லா வாழ்வை
நினைவூட்டி மறைகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிப்புணர்ச்சி

என்னுடைய விழிகள்
இரண்டும் எப்போதும்
திறந்தேதான் இருக்கும்!

என்னுடைய விழிகள்
இடையிடையே மூடினால்
என்னை நோக்கி எத்தனையோ
துப்பாக்கி முனைகள்
சுடுவதற்கென்றே
எப்போதும் தயாராய்
இருந்து வருகின்றன!

என்னுடைய விழிகள் - எப்பொழுதும்
திறந்தே இருந்தால்
என்னை நோக்கி
இருக்கின்ற துப்பாக்கிகள்
சுடுவதற்குப் பயந்து
தூரத்தே விலகிவிடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22

என்னுடைய விழிகள்
எப்பொழுதும் திறந்திருக்க
நீண்ட நாட்களாய் நான்
நித்திரையும் கொள்ளவில்லை!

விழிகள் இரண்டும்
வேடிக்கை பார்த்து நின்றால்
துப்பாக்கி ரவைகள்
துளைக்கும் என்னுடலை!

துப்பாக்கி ரவைகள்
துளைத்தாலு மென்ன
மாபெரிய —
தப்புகள் அத்தனையும்
தரணியிலே ஒளியும்வரை
என்னுடைய விழிகள்
இரண்டும் எப்போதும்
திறந்தேதான் இருக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நப்பாசை

காற்று அடிக்கிறது -
கடலிரைந்து சிரிக்கிறது -
நேற்று நடந்த நிகழ்ச்சிக்கு
நினைவெல்லாம் மீள்கிறது!

நேற்று நான் என்னுடைய
எதிர்காலத்தின் -
ஆட்சியைப் பற்றி
நினைத்தவை, இன்று
வேற்று உருவுடனே
வேதனையைத் தருகிறது!

எதிர்காலத்தில் நான்
என்னுடைய -
ஆட்சி அமைப்பில்
எத்தனையோ மனிதர்களை
ஆட்டிப் படைத்து
அவர்கள் அனைவருக்கும்
சாட்டை அடி கொடுப்பேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தில் நான்
இருக்கும் நிலை எண்ணி
அதிகாரத் தொணியில்
அநேகருடன் பேசியவை
இன்று என் மனதில்
இருந்து அவிகிறது!

நேற்று நான் எதிர்கால
ஆட்சி அமைப்பினை
எண்ணியதாய் நடக்கையிலே -
வாழைப் பழத்தோலில்
வழுக்கி விழுந்து -
என்னுடைய
வலது கால் ஒடிந்ததனால்
மீளாத வேதனையில்
மிதக்கிறது என்னுடம்பு!

காற்று அடிக்கிறது -
கடலிரைந்து சிரிக்கிறது -
நேற்று இருந்த நிலையினை
நினைத்து மனம் குழைகிறது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீண்டா நெருப்பு

சட்டைப் பையிலிருந்த 'சிகரட்'
பெட்டியைத் திறந்து
விட்டுவைத்த சிகரட் ஒன்றை
விரலிடையே எடுத்து வைத்து
நெருப்புக்காய் 'பஸ்' தரிப்பு
நிலையத்தில் நிற்கின்றேன்!

பஸ் வண்டி வருவதற்கு
பல நிமிடஞ் சென்றிடுமோ?
புஸ்...........ஸ்........ஸ்....!
அங்கே ஒருவர் -
சிகரட் பிடிப்பதற்காய்
தன் கையிலிருந்த
தீப்பெட்டியை உராய்கிறார்!
அவர் நிற்குமிடம்
நோக்கி விரைகின்றேன்!

"ப்லீஸ்........"
நெருப்புக்காய் கையை
நீட்டுகிறேன், அவர்
வாயிலிருந்த சிகரட்டை
விருப்பின்றி என்னிடத்தில்
வேகமாய் நீட்டுகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேங்ஸ்........"
அவரின் முகத்தை நன்கு
ஆசையுடன் நோக்கிவிட்டு
நான் நின்ற இடத்தினை
நாடி நடை போடுகிறேன்!

அவர் தந்தது நெருப்பெனினும்
அது என்னைத் தீண்டவில்லை!
அவர் செய்த அச்சிறிய
ஆபத்தின் உதவிக்காய்
அவர் முகத்தை இன்று வரை
மறக்காமல் இருக்கின்றேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முனிவன்

அடர்ந்த காட்டில்
அங்கோர் இடத்தில்........
முனிவன் ஒருவன்
மௌனமா யிருந்து -
தன்னை மறந்து -
தவத்திலாழ்ந்தான்!

தன்னை மறந்து
இருந்த முனிவன்
கண்ணைத் திறந்து
பார்த்தபோது........
எண்ணெய் ஊற்றி
எரியும் திரிபோல்
காடு முழுவதும்
கருகி எரிந்தது!

எந்த உயிரும்
இல்லாதிருந்த
அந்தக் காட்டில்........
முனிவன் மட்டும்
மீண்டும் மெல்லக்
கண்ணை மூடித் -
தனியே இருந்து
தவத்திலாழ்ந்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை

எத்தனையோ மாலைகள்
அவர் கழுத்தில் விழுந்திடலாம் —
அத்தனையும் அவர் கழுத்தை
இறுக்கிவிடும் தொண்டுகளாம்!

கழுத்தினிலே விழுமந்தக்
கணக்கில்லா மாலைகளோ
எழுத்துத் துறையிலவர்
இருப்போரைப் போற்றுவதால்!

கழுத்தினிலே விழுமந்தக்
கணக்கில்லா மாலைகளால்
அழுத்தம் தாங்காது
அவரொரு நாள் பட்ட துன்பம்........

கழுத்தினிலே போடமுன்னர்
கமகமக்கும் மாலைகளும்
எழுத்தாளர் கழுத்தினிலே
இருக்கையிலே மணப்பதில்லை!
உழைத்துமுயர் வடையார்
உதிரத்தின் வாடைகளே
கழுத்தில் விழும் மாலைகளில்
கடிதாக வீசிவரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயநலம்

சிலந்தி ஒன்று மூலையில்
சிறிய வலையைப் பின்னவே
கலந்து மற்றும் சிலந்தியை
கண்டு உதவி கேட்டது!
சிலந்தி யெல்லாம் ஓரிடம்
சேர்ந்து அச் சிலந்தியை -
இலந்தை மரக் கொம்பரில்
ஏறிப் பின்னச் சொல்லின!

உலர்ந்த கிளையைக் கொண்ட அவ்
(வு)யர்ந்த இலந்தை மரத்திலே
சிலந்தி வலையைப் பின்னவே
சிறிது பயந்து, அங்கு பாழ்
விழுந்து கிடக்கும் கட்டிட
மூலை தேடி அலைந்ததே!

அலைந்து திரிந்த பின்னர் ஓர்
அழிந்த மனையின் சுவரிலே
சிலந்தி தனது வலையினைச்
சேர்த்துப் பின்னி வாழ்ந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல திங்கள் சென்றன........
பாழடைந்த மனையினுள்
சில சுவர்கள் இடிந்தன!
சிதறி மண்ணில் வீழ்ந்தன!
சிலந்தி வாழ்ந்த சுவருமே
சேர்ந்து வீழ்ந்து சிதறின!
சிலந்தி - வீழ்ந்த சுவரினுள்
சிக்கி மாண்டு மடிந்தது!

குலத்தின் பெரியோர் கூறிய
கூற்றை ஏற்காச் சிலந்தி தன்
நலத்தைக் கருதிப் பிரிந்ததால்
நன்மதிப்பை இழந்ததே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வெளியீடுகள்

1. ஓடக் குழல்
   புதுக் கவிதை
2. மழையில்லா மேகம்
   புதுக் கவிதை
3. ஞாஞ்சல்
   பொது அறிவு வினா - விடைகள்
4. வெள்ளையில் ஒரு புள்ளி
   சிறு கவிதைகள்

அச்சில் உள்ளவை:

வெள்ளிச் சுவடு
சன்மார்க்கச் சிந்தனைகள்

செதுக்கல்
நீதிக் கதைகள்

சிந்திக்க! சிறக்க!!
முதுமொழித் திரட்டு

**KAMAL BROTHERS PUBLICATION**
75/45. Abdul Hamid Street.
COLOMBO - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிவர உள்ளவை!

## ஆசிரியரின் பிற படைப்புக்கள்

★★★★★★★

கவிதைகள்: (தொகுதிகள்)

இயற்கையும் காதலும்

புதியதோர் உலகம் செய்வோம்!

அன்புச் சோதரிக்கு........

முஸ்லிம் பெண்ணே!

பெருமானார்

நாளும் வாழ்வும்

அவர்கள்........

கட்டுரைகள்: (தொகுதி)

முஸ்லிம்களின் வசந்த காலங்கள்

சிறு கதைத் தொகுதி:

களங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஸிம் அஹமது

பத்து வருடங்களுக்கு மேலாக கவிதை எழுதி வருகிறார். கிழக்கிலங்கையில் நாட்டார் பாடல்களுக்குப் புகழ் பெற்ற கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், 1951ம் ஆண்டு பிறந்தவர். இவரது தந்தையாரான ஐனுப். எம். அஹமது அவர்கள் இப்பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற ஒரு சுதேச மருத்துவர். இவரது தாயார் பெயர் உம்மு சல்மா. தாஸிம் அஹமது இன்னும் திருமணமாகாத இளைஞர்.

கல்முனை சாஹிறக் கல்லூரியில் ஆரம்பக் கல்வி பயின்ற இவர், தனது முதுசமான சுதேசமருத்துவத்தில் ஈடுபாடு கொண்டு, கொழும்பு சுதேச மருத்துவக் கல்லூரியில் பயின்று அத்துறையில் விசேட சித்தி பெற்றுள்ளார். தற்போது கொழும்பில் தனியார் மருத்துவ நிலையம் ஒன்றில் மக்கள் அபிமானம் பெற்ற ஒரு சிறந்த மருத்துவராகக் கடமையாற்றுகின்றார்.

பத்திரிகைகளில் ஏராளமாக எழுதிப் பிரபலம் பெறாத இவர், ஒரு நல்ல கவிஞன். 1970ல் கவிஞன் 3ம் இதழில் இவர் எழுதிய "நம்பிக்கை" என்னும் கவிதை முனையிலேயே இவர் ஒரு நல்ல கவிஞர் என்பதைக் காட்டியது. பிறரோடு இங்கிதமாகப் பழகுபவர் என நண்பர்கள் மத்தியில் பிரசித்தி பெற்ற இவரது கவிதைகளும் இங்கிதமானவை; இனியவை.

எம். ஏ. நுஃமான் B. A. (Cey)
விரிவுரையாளர்

யாழ் பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org